முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2022 யூலை

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advance Financial Accounting & Costing)

2022-08-20
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத :03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.6** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** **வரையறுக்கப்பட்ட அமீன் கம்பனி** 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூபா 840,000/- கிரயத்தில் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. இயந்திரமானது ஆயுட்காலம் ஈறாக நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படுகிறது. இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக உள்ளதுடன் ஆயுட் கால முடிவில் இந்த இயந்திரத்தின் ஈற்றுப் பெறுமதி (residual value) ரூபா 40,000/- என மதிப்பிடப்பட்டது.

2022 மார்ச் 31 இல் இயந்திரத்தின் முன்கொணரற் பெறுமதி (carrying value) :

(1) ரூபா 160,000/-. (2) ரூபா 128,000/-.

(3) ரூபா 200,000/-. (4) ரூபா 320,000/-.

(02 புள்ளிகள்)

**1.2** LKAS 02 – தொக்குகள் நியமம் தொடர்பில் கீழ்வருவனவற்றில் **தவறான** கூற்று எது?

(1) தொக்குகள் கிரயத்தில் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதியில் எது உயர்வானதோ அப்பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.

(2) தொக்குகள் சாதாரண வணிக முறையில் விற்பனைக்காக வைத்திருக்கப்படுகின்றன.

(3) தொக்குகளின் கொள்வனவுக் கிரயமானது கொள்வனவு விலை, இறக்குமதித் தீர்வைகள் மற்றும் ஏனைய வரிகளை உள்ளடக்கியுள்ளது.

(4) முதலில் உள்வருவதை முதலில் வெளியில் அனுப்புதல் (FIFO) என்பது தொக்குகளை பெறுமதியிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. (02 புள்ளிகள்)

**1.3** கீழ்வரும் தகவல்கள் **ABC கம்பனி பி.எல்.சீ.** இன் இயந்திரமொன்று தொடர்பாகத் தரப்பட்டுள்ளன **:**

| | |
|---|---|
| கொள்வனவு விலை | : ரூபா 500,000/- |
| பயன்தரும் ஆயுட்காலம் | : 4 ஆண்டுகள் |
| ஈற்றுப் பெறுமதி | : ரூபா 20,000/- |

இயந்திரத்தின் தேய்மானப் பெறுமதி :

(1) ரூபா 120,000/-. (2) ரூபா 520,000/-. (3) ரூபா 480,000/-. (4) ரூபா 500,000/-.

(02 புள்ளிகள்)

**1.4** கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக :

**(a)** முதன்மைக் கிரயமானது நேரில் கூலிக் கிரயத்தை உள்ளடக்கியுள்ளது.

**(b)** மேந்தலைகளை உற்பத்தி மற்றும் உற்பத்தியற்ற மேந்தலைகள் எனப் பிரிக்கலாம்.

**(c)** ஏற்கனவே செலவு செய்யப்பட்ட ஒரு கிரயம் ஆழ் (sunk) கிரயம் என அழைக்கப்படுகிறது.

மேலுள்ளவற்றுள், சரியான கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

**1.5** கீழ்வரும் தகவல்கள் உற்பத்திக் கம்பனி ஒன்றின் **பொருள் A** தொடர்பானவை ஆகும் :

| | |
|---|---|
| உயர்ந்தபட்சப் பாவனை | 400 அலகுகள் |
| குறைந்தபட்சப் பாவனை | 150 அலகுகள் |
| கட்டளைக் காலம் | 4 - 8 மாதங்கள் |
| மறு கட்டளைக் கணியம் | 700 அலகுகள் |

**பொருள் A** இன் மறு கட்டளை மட்டம் :

(1) 1,600 அலகுகள் (2) 3,200 அலகுகள். (3) 2,800 அலகுகள். (4) 1,300 அலகுகள்.

(02 புள்ளிகள்)

**1.6** கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக :

**(a)** பங்காளர் ஒருவரால் பங்குடமைக்கு வழங்கப்பட்ட கடன்களுக்காக ஆண்டொன்றிற்கு 5% வட்டியைப் பங்காளர் பெற முடியும்.

**(b)** பங்காளர் ஒருவர் பங்குடமையின் முகாமைத்துவத்தில் பங்கேற்பதற்கு உரித்துடையவர்.

**(c)** பங்காளர் ஒருவர் அவரது சொந்த விருப்பத்தின் பேரில் பங்குடமைக்கு ஒரு புதிய பங்காளரை அறிமுகப்படுத்தலாம்.

மேலுள்ளவற்றில், 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின்படி பங்காளர்களின் உரிமைகள் தொடர்பில் சரியான கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

**1.7** தொடக்கம் **1.10** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.7** கீழுள்ள தேர்வு நிபந்தனைகளின் (Criteria) அடிப்படையில், கிரயக் கணக்கீட்டை நிதிக் கணக்கீட்டிலிருந்து வேறுபடுத்துக :

(a) கால வரையறை (Time span) (b) நோக்கம் (Purpose) (02 புள்ளிகள்)

**1.8** பங்குடமை உடன்படிக்கை ஒன்றில் உள்ளடக்கப்படும் மூன்று (03) அடிப்படை விடயங்களை (Basic contents) நிரற்படுத்துக. (03 புள்ளிகள்)

**1.9** **வரையறுக்கப்பட்ட XY கம்பனி** என்பது பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனியாகும். கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் மாதத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூபா** |
|---|---|
| விற்பனைகள் (VAT தவிர்ந்த) | 1,296,000 |
| கொள்வனவுகள் (VAT தவிர்ந்த) | 750,000 |
| கடன் விற்பனை மீதான திரும்பல் (VAT தவிர்ந்த) | 300,000 |
| 2022 மார்ச் 01 இல் VAT கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு (Credit) மீதி | 245,000 |

அனைத்து கொள்வனவு மற்றும் விற்பனைகளும் வரி விலைப்பட்டியல்களுடன் ஆதரவளிக்கப் படுவதுடன் பொருத்தமான VAT வீதம் 8 % ஆகும்.

2022 மார்ச் 31 இல் செலுத்த வேண்டிய VAT கணக்கு மீதியைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

**1.10** கீழ்வரும் தகவல்கள் **பணி இல. 2000** தொடர்பில் **வரையறுக்கப்பட்ட நதுன் கம்பனியிலிருந்து** பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும் :

நேர் மூலப்பொருள் : 8,000 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 40/- வீதம்

நேர் கூலி – பிரிவு I : 300 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 800/- வீதம்

நேர் கூலி - பிரிவு II : 450 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 1,200/- வீதம்

உற்பத்தி மேந்தலை : மொத்த நேர் கூலிக் கிரயத்தில் 75%.

கம்பனி, கிரயத்தில் 20 % இலாபத்தைப் பேணுகிறது.

**பணி இல. 2000** இற்கு வசூலிக்கப்பட வேண்டிய விலையைக் கணிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

கீழ்வரும் தகவல்கள் **ஹன்சி** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரமான **சேப்ரி டிஸ்ரிபியூட்டர்ஸ்** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. **சேப்ரி டிஸ்ரிபியூட்டர்ஸ்** ஆனது கிரயத்தில் 20% நிலையான இலாப எல்லை வைத்து காசு அடிப்படையில் அனைத்து விற்பனைகளையும் மேற்கொள்வதுடன் கொள்வனவுகளை கடனடிப்படையில் மேற்கொள்கிறது.

தனியுடமை வியாபாரத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் கீழ்வருமாறு : *(ரூபா)*

| | **2022 மார்ச் 31 இல்** | **2021 மார்ச் 31 இல்** |
|---|---|---|
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 378,000 | 310,000 |
| தொக்குகள் | ? | 98,500 |
| முன்னரே செலுத்தப்பட்ட வாடகை | ? | 40,000 |
| வங்கி மீதி | ? | 27,500 |
| வியாபாடக் கடன்கொடுத்தோர் | 19,200 | 11,500 |
| அட்டுறு கட்டணப் பட்டியல்கள் (நீர், மின்சாரம்) | 5,000 | 3,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) குறிப்பிட்ட நாளொன்றில் சேகரிக்கப்படும் அனைத்து விற்பனை வருமானமும் அதே நாளில் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படுகிறது.

(2) 2022 மார்ச் 31 இல், **ஹன்சியின்** சொந்தப் பணத்திலிருந்து வியாபாரத்தின் பாவனைக்காக ரூபா 150,000/- இற்கு ஒரு காற்று பதனமாக்கி கொள்வனவு செய்யப்பட்டது.

(3) கடையானது வாடகைக்குப் பெறப்பட்ட கட்டடமொன்றில் இயங்குவதுடன், உடன்படிக்கையின்படி, வருடாந்த வாடகையானது ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் 01 ஆம் நாள் முற்பணமாகச் செலுத்தப்படுகிறது. மாத வாடகை ரூபா 8,000/- ஆகும்.

(4) ஆண்டிற்கான வியாபாரத்தின் வங்கிக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ஊடுசெயல்களின் ஒரு பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

| | **ரூபா** |
|---|---|
| **பெறுவனவுகள் :** | |
| வைப்புச் செய்யப்பட்ட காசு | 5,000,000 |
| **கொடுப்பனவுகள் :** | |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 3,800,000 |
| வாடகை | 96,000 |
| சம்பளங்களும் கூலிகளும் | 360,000 |
| தொலைபேசிக் கட்டணப்பட்டியல் | 12,000 |
| நீர் மற்றும் மின்சாரக் கட்டணப் பட்டியல்கள் | 75,000 |
| **ஹன்சியின்** எடுப்பனவுகள் | 420,000 |

***நீங்கள் செய்ய வேண்டியது :***

2022 மார்ச் 31 இலான **சேப்ரி டிஸ்ரிபியூட்டர்ஸ்** இன் பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 03

**ரங்கா, நங்கா, துல்கா** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 2:2:1 என்ற விகிதத்தில் பகிரும் **ரந்து பெஷன்ஸ்** என்ற பெயரில் பங்குடமை வியாபாரம் ஒன்றை நடத்துகின்றனர். உங்களுக்கு கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றுக்கு வழிசெய்கிறது :

- 2021 சனவரி 01 இலான மூலதன மீதிகளுக்கு 10% வருடாந்த வட்டி செலுத்தப்பட வேண்டும்.
- வியாபாரத்தை முகாமை செய்வதில் ஈடுபட்டுள்ளமைக்காக **நங்காவுக்கு** ரூபா 50,000/- மாதாந்தச் சம்பளம் பெற உரித்துண்டு.

(2) 2021 டிசெம்பர் 31 இல், **துல்கா** பங்குடமையிலிருந்து ஓய்வு பெறத் தீர்மானித்ததுடன், **ரங்காவும் நங்காவும்** கீழ்வரும் உடன்படிக்கையின் கீழ் அதே பெயரில் பங்குடமையைத் தொடர்வதற்குத் தீர்மானித்தனர் :

- **துல்காவுக்குச்** செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளும் 2022 சனவரி 01 இல் முழுமையாகச் செலுத்தப்பட வேண்டும்.
- புதிய பங்குடமையின் இலாப, நட்டங்களை **ரங்காவும் நங்காவும்** சமமாகப் பகிர்தல் வேண்டும்.

(3) பங்குடமையின் நன்மதிப்பு 2021 டிசெம்பர் 31 இல் ரூபா 3,000,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை, நன்மதிப்புக் கணக்கொன்றைப் பேணாது பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாகச் சீராக்கம் செய்வதற்கு இணங்கப்பட்டுள்ளது.

(4) கீழ்வரும் மீதிகள், பங்குடமையின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

*(ரூபா ’000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனக் கணக்குகள் - 2021 சனவரி 01 இல்: | | |
| **ரங்கா** | | 8,000 |
| **நங்கா** | | 8,000 |
| **துல்கா** | | 4,000 |
| நடைமுறைக் கணக்குகள் - 2021 சனவரி 01 இல்: | | |
| **ரங்கா** | 226 | |
| **நங்கா** | | 632 |
| **துல்கா** | 50 | |
| 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எடுப்பனவுகள்: | | |
| **நங்கா** | 550 | |

(5) பங்குடமையின் நடைமுறையல்லாச் சொத்துக்கள் 2021 டிசெம்பர் 31 இல் கீழுள்ளவாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன், அவற்றை கணக்கேடுகளில் மீள்மதிப்பீட்டுத் தொகைகளில் முன்கொண்டு செல்ல இணங்கப்பட்டது: *(ரூபா ’000)*

| | கிரயம் | 2021 டிசெம்பர் 31 இலான திரள் தேய்மானம் | மீள்மதிப்பீட்டுப் பெறுமதி |
|---|---|---|---|
| காணியும் கட்டடமும் | 6,000 | 200 | 7,000 |
| மோட்டார் வாகனங்கள் | 2,000 | 500 | 2,600 |

(6) 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் நிகர இலாபம் ரூபா 3,800,000/-.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ரந்து பெஷன்ஸ்** இன் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) பங்காளர்களின் மூலதனக் கணக்குகள். (06 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள். (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

கொழும்பில் வசிக்கின்ற, கண்டி ஶ்ரீ ரோகண தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் தங்களுக்கிடையில் வலையமைப்பொன்றை உருவாக்குவதற்காக 2019 சனவரி 01 இல் **"ரோகானியன்ஸ் கொழும்பு"** என்ற பெயரில் சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளனர் :

உங்களுக்குக் கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 15,000/- ஆகும். 2019 இல் சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது 100 அங்கத்தவர்கள் இணைந்து கொண்டனர். 2020 ஆம் ஆண்டில் 20 அங்கத்தவர்களும் 2021 ஆம் ஆண்டில் 10 அங்கத்தவர்களும் புதிதாக இணைந்து கொண்டனர்.

(2) 2020 ஆம் ஆண்டிற்கான 15 அங்கத்தவர்களின் அங்கத்துவக் கட்டணங்கள் 2020 டிசெம்பர் 31 இல் நிலுவைகளாக இருந்தன. அவர்களில் 12 அங்கத்தவர்கள், தங்களுடைய 2021 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவக் கட்டணங்களுடன் சேர்த்து அவர்களுடைய நிலுவைகளையும் 2021 ஆம் ஆண்டில் செலுத்தியுள்ள அதே வேளை 3 அங்கத்தவர்கள் 2020 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தாது 2021 இன் ஆரம்பத்தில் குடிபெயர்ந்தனர். 2021 யூன் 01 இல் நடைபெற்ற நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் அவர்களுடைய அங்கத்துவத்தை இரத்துச் செய்யவும் 2021 சனவரி 01 இல் வருமதியாக இருந்த தொகையை பதிவழிப்புச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(3) 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 20 அங்கத்தவர்கள் தங்களுடைய 2021 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்தியிருந்தனர். மேலும் 2021 ஆம் ஆண்டில், 4 அங்கத்தவர்கள் 2022 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்தியிருந்தனர்.

(4) சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது, ரூபா 230,000/- கிரயத்தில் சங்கத்தால் மடிக்கணினி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதனை 5 ஆண்டுகளுக்குப் பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டது. அதனை கிரயத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

(5) 2021 ஆம் ஆண்டிற்காக சங்கத்தால் கீழ்வரும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன :

- காகிதாதிகள் : ரூபா 45,000/-
- தபால் கட்டணம் : ரூபா 36,000/-
- பயணச் செலவுகள் : ரூபா 12,000/-
- தொலைபேசிக் கட்டணம் : ரூபா 15,000/-

(6) சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் 2021 செப்ரெம்பர் 30 இல் இடம்பெற்றது. அது தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வருமாறு :

- 90 அங்கத்தவர்கள், ஒவ்வொருவரும் ரூபா 2000/- செலுத்தி இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.
- இந்த வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்காக ஹோட்டலுக்கு ரூபா 50,000/- உம் இசைக் குழுவுக்கு ரூபா 20,000/- உம் செலுத்தப்பட்டதைத் தவிர வேறு எந்தச் செலவுகளும் செய்யப்படவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ரோகானியன்ஸ் கொழும்பு சங்கத்திற்காக** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) அங்கத்துவச் சந்தா கணக்கு. (05 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு. (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) **ராம் அன்ட் கம்பனி** என்பது குழந்தைகளுக்கான ஆடைகளைத் தயாரிக்கின்ற ஒரு ஆடைத் தொழிற்சாலை ஆகும். இந்தக் கம்பனி கீழ்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கிறது :

- வெட்டும் பிரிவு
- தைக்கும் பிரிவு
- பொதியிடும் பிரிவு
- களஞ்சியசாலை
- பராமரிப்புப் பிரிவு
- நிதி மற்றும் மனித வளப் பிரிவு

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேற்படி பட்டியலில் இருந்து கம்பனியின் உற்பத்திக் கிரய நிலையங்களையும் சேவைக் கிரய நிலையங்களையும் **அடையாளம் காண்க.** (04 புள்ளிகள்)

(B) **ராம் அன்ட் கம்பனியின்** பணிப்பாளர்கள் சபையானது ஒன்றிணைந்த முகாமைத்துவக் கணக்கீட்டு முறைமையொன்றைப் பயன்படுத்தத் தீர்மானித்தது.

கீழ்வரும் ஊடுசெயல்கள் 2021 டிசெம்பர் மாதத்தில் கம்பனியில் இடம்பெற்றிருந்தன :

| | **ரூபா** |
|---|---|
| 2021 டிசெம்பர் 01 இல் இருப்பு : | |
| - மூலப்பொருள் | 250,000 |
| - புத்துருவாகும் வேலை (WIP) | 300,000 |
| மூலப் பொருள் கொள்வனவு – கடன் அடிப்படையில் | 500,000 |
| – காசு அடிப்படையில் | 175,000 |
| உற்பத்திக்காக வழங்கப்பட்ட பொருள்கள் | 550,000 |
| உற்பத்தி மீதான நேர் கூலிகள் | 600,000 |
| உற்பத்தி மேந்தலைக் கிரயங்கள் | 250,000 |
| முடிவுப் பொருள்களின் உற்பத்திக் கிரயம் | 1,600,000 |
| விற்பனை செய்யப்பட்ட பொருள்களின் கிரயம் | 1,550,000 |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2021 டிசெம்பர் மாதத்திற்கான கீழ்வரும் கணக்குகளைத் **தயாரிக்குக** :

(a) மூலப்பொருள் கட்டுப்பாட்டுக் கணக்கு. (03 புள்ளிகள்)

(b) WIP கட்டுப்பாட்டுக் கணக்கு. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(A) கீழ்வரும் தகவல்கள், **பொருள் A** இனை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருள் **RM 5** தொடர்பாக **வரையறுக்கப்பட்ட பைன் (தனியார்) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும் :

| | |
|---|---|
| கொள்வனவுக் கிரயம் | கிலோகிராமொன்று ரூபா 120/- |
| கட்டளையிடல் கிரயம் | கட்டளையொன்று ரூபா 28,900/- |
| வருடாந்த தொக்கு வைத்திருத்தல் கிரயம் | கிலோகிராமொன்று ரூபா 20/- |
| வருடாந்த உற்பத்தி **(பொருள் A)** | வருடமொன்றுக்கு 100,000 அலகுகள் |

**பொருள் A** இன் அலகொன்றை உற்பத்திசெய்ய 250 கிராம் **RM 5** பயன்படுத்தப்படுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

மூலப்பொருள் **RM 5** இற்காக கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) வருடாந்தக் கேள்வி (Annual Demand). (02 புள்ளிகள்)

(b) சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ). (03 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட பைன் (தனியார்) கம்பனி** துண்டு வீத (Piece rate) அடிப்படையைப் பயன்படுத்தி கூலிக்கான கொடுப்பனவைச் செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் மாதம் தொடர்பான பதிவுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| நாளொன்றின் சாதாரண வேலை நேரம் | 8 மணித்தியாலங்கள் |
| அடிப்படைக் கொடுப்பனவு | மணித்தியாலம் ஒன்றுக்கு ரூபா 125/-. |
| அலகொன்றுக்காக அனுமதிக்கப்பட்ட நியம காலம் | 4 நிமிடங்கள் |
| தவணை மிகையூதிய வீதம் (Premium bonus rate) | சேமிக்கப்பட்ட நேரத்திற்கு அடிப்படைக் கொடுப்பனவில் 60%. |
| மாதமொன்றிலுள்ள வேலை நாட்களின் எண்ணிக்கை | 20 நாட்கள் |
| மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் | 2,850 |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2022 மார்ச் மாதத்திற்காகச் செலுத்தப்படும் மொத்த உழைப்பைக் (earnings) **கணிக்குக.**
(05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

2022 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட பேர்ள் (தனியார்) கம்பனியின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

*(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (3,000,000 சாதாரண பங்குகள்) | | 300,000 |
| கைக்கொள் இலாபம் – 2021 ஏப்ரல் 01 இல் | | 80,000 |
| 15% தனிச்சங்கள் | | 40,000 |
| அலுவலக உபகரணம் | 15,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 85,000 | |
| **2021 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம் :** | | |
| அலுவலக உபகரணம் | | 9,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 37,100 |
| வியாபார வருமதிகள் | 359,470 | |
| வியாபார சென்மதிகள் | | 105,618 |
| 2022 மார்ச் 31 இல் தொக்கு | 190,552 | |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 157,169 | |
| விற்பனைகள் | | 973,880 |
| விற்பனைக் கிரயம் | 606,254 | |
| எரிபொருள் மற்றும் போக்குவரத்துச் செலவினங்கள் | 8,540 | |
| அலுவலக வாடகை | 1,125 | |
| விளம்பரப்படுத்தல் மற்றும் விற்பனைப் பணிசை (தரகு) | 25,287 | |
| நீர் மற்றும் மின்சாரம் | 1,309 | |
| வங்கிக் கட்டணங்கள் | 751 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 88,244 | |
| ஏனைய நிருவாகச் செலவினங்கள் | 3,602 | |
| தனிச்ச வட்டி | 3,000 | |
| செலுத்திய வருமான வரி | 3,445 | |
| 2021 ஏப்ரல் 01 இல் அறவிடமுடியாக் கடன் | | 3,150 |
| | **1,548,748** | **1,548,748** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் நேர்கோட்டு முறையில் கீழுள்ளவாறு தேய்மானம் செய்யப்பட வேண்டும் :

| | |
|---|---|
| அலுவலக உபகரணம் | 5 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 4 ஆண்டுகள் |

(2) 2022 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கு கணக்கேடுகளில் பதிவு செய்யப்பட்டன. அதன் பின்னர், 2022 ஏப்ரல் 15 இல், ரூபா 2,700,000/- பெறுமதியான ஒரு தொகுதி தொக்குகள் வழக்கிழந்து போயுள்ளதாக தெரியவந்ததுடன் அதனை ஏப்ரல் மாதத்தில் ரூபா 2,100,000/- இற்கு விற்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், இது தொடர்பில் கணக்கேடுகளில் சீராக்கங்கள் செய்யப்படவில்லை.

(3) வாடிக்கையாளர் ஒருவர் வங்குரோத்து நிலையை அடைந்ததன் காரணமாக அவரிடமிருந்து வர வேண்டியிருந்த ரூபா 70,000/- இனை பதிவழிப்புச் செய்வதற்கு பணிப்பாளர்கள் சபை தீர்மானித்திருக்கிறது. மேலும், 2022 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியில் 5% ஐயுறவுக் கடன் ஏற்பாட்டைச் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

(4) 2021/22 வரிமதிப்பாண்டிற்கான இறுதி வருமான வரிப் பரிப்பு ரூபா 3,825,000/- ஆகும். 2021/22 வரிமதிப்பாண்டு தொடர்பில் ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 3,000,000/- வருமான வரியாகச் செலுத்தப்பட்டது. கடந்த வரிமதிப்பாண்டிற்காக ரூபா 445,000/- குறைத்து வழங்கப்பட்ட வருமான வரியானது ஏற்பிசைவு செய்யப்பட்டதுடன் அது நடப்பு ஆண்டின் காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டது. ஆயினும் இது கடந்த நிதியாண்டின் கணக்கேடுகளில் மேற்கொள்ளப்பட்ட வருமான வரி ஏற்பாட்டை கருத்திற் கொள்ளவில்லை.

(5) கம்பனி 2021 ஏப்ரல் 01 இல் 15% தனிச்சங்களை வழங்கியதுடன் வட்டியானது வருடத்திற்கு இரு முறை செலுத்தப்படுகிறது.

(6) அட்டுறு மின்சாரச் செலவினம் ரூபா 65,000/- ஆனது 2022 மார்ச் 31 இல் கணக்கிற் கொள்ளப்பட வேண்டும்.

(7) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2022 மே 31 இல் பணிப்பாளர்கள் சபையால் அதிகாரமளிக்கப்பட்டன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

முகாமையின் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட பேர்ள் (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் வேறு முற்றடக்க வருமான (முற்றடக்க வருமான) கூற்று. (13 புள்ளிகள்)

(b) 2022 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |